செ.வெ.எண்.32 நாள்: 09.09.2021

# தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று தடுப்பு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் கீழ் அபராதம் விதிக்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தமிழ்நாட்டில் கொரோனா முதல் மற்றும் இரண்டாவது அலைகள் ஏற்பட்டு அரசின் தீவிர நடவடிக்கையால் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் நலன் கருதி நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் பின்பற்றி கடைகள், வணிக நிறுவனங்கள், மார்க்கெட் போன்றவை முழு அளவில் செயல்பட்டு வருகின்றன. இதனால், பொது மக்கள் நடமாட்டம் அதிக அளவில் உள்ளது. பொதுமக்கள் கடை தெருக்கள் / மார்க்கெட்டுகள் / வணிக நிறுவனங்கள் / மொத்த மற்றும் சில்லரை வியாபார நிறுவனங்களில் அதிகமாக கூடுவதாலும் அதனால் கொரோனா நோய் தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழக அரசின் அறிவுறுத்தலின்படி, கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்கு காய்ச்சல் பரிசோதனை மற்றும் தடுப்பூசி முகாம்கள் நடத்துதல், தொற்று பாதிக்கப்பட்டவர்களுடன் தொடர்பில் உள்ள நபர்களை கண்டறிதல், முன்களப் பணியாளர்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள ஏற்பாடு செய்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நோய் பரவலை தடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 1939-ன் கீழ் தொற்று தனிமைப்படுத்துலில் விதிமீறல்களுக்கு ரூ.500, முகக்கவசம் அணியாமல் இருப்பதற்கு ரூ.200, பொது இடங்களில் எச்சில் துப்புபவர்களுக்கு ரூ.500, சமூக இடைவெளியை கடைபிடிக்காமல் இருப்பவர்களுக்கு ரூ.500, அரசால் வெளியிடப்பட்ட நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை மீறும் நிறுவனங்களுக்கு ரூ.5000, கொரோனா கட்டுப்படுத்தப்பட்ட பகுதியில் விதிமுறைகளை மீறும் தனிநபருக்கு ரூ.500 மற்றும் நிறுவனங்களுக்கு ரூ.5000 அபராதம் விதித்து வசூல் செய்யப்படும். விதிமுறைகளை மீறுபவர்களை கண்டறிந்து அபராதம் விதிக்க கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு குழுவினர் இதுதொடர்பான விபரத்தினை அறிக்கையாக மாவட்ட ஆட்சியர் மற்றும் உயர் அலுவலருக்கு உடனடியாக தெரிவிப்பார்கள். எனவே பொதுமக்கள் முககவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் உள்ளிட்ட அரசின் பல்வேறு நெறிமுறைகளை கடைபிடித்து மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ளும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.